**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – திருச்சி மாவட்டம், துறையூர் மாணவியர் விடுதி மற்றும் செங்காட்டுப்பட்டி மாணவர் விடுதிக் கட்டடங்கள் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் கட்டுதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (நிலை) எண்: 63

நாள் : 23.10.2017
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 06,
திருவள்ளுவர் ஆண்டு 2048.
படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல இயக்குநரது கடித எண்.பமே/ஈ1/4037/2017,
நாள் 07.08.2017.

-----

**ஆணை:-**

2017–18ஆம் ஆண்டிற்கான வரவு செலவுக் கூட்டத் தொடரில் 17.07.2017 அன்று நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, திருச்சி மாவட்டம், துறையூரில் தற்போது பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வரும் மாணவியர் விடுதிக்குப் பதிலாக ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் 100 மாணவியர் தங்குமளவிலான புதிய விடுதிக் கட்டடம் மற்றும் திருச்சி மாவட்டம், செங்காட்டுப்பட்டியில் பழுதடைந்த கட்டடத்தில் இயங்கி வரும் மாணவர் விடுதிக்குப் பதிலாக ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் 200 மாணவர்கள் தங்குமளவிலான புதிய விடுதிக் கட்டடம் கட்டும் வகையில் அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பழங்குடியினர் நல இயக்குநர் தமது மேலே படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக, திருச்சி மாவட்டம், துறையூரில் 100 மாணவியர் தங்கும் விடுதியினை ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கட்டவும் மேலும் செங்காட்டுப்பட்டியில் 200 மாணவர்கள் தங்கும் விடுதியினை ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் கட்டவும் அரசின் அனுமதியினை வழங்குமாறு அரசைக் கோரியிருந்தார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, திருச்சி மாவட்டம், துறையூரில் ரூ.2,30,00,000/–(ரூபாய் இரண்டு கோடியே முப்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 100 மாணவியர் தங்குமளவிலான புதிய விடுதிக் கட்டடம் மற்றும் ரூ.3,60,00,000/– (மூன்று கோடியே அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 200 மாணவர்கள் தங்குமளவிலான புதிய விடுதிக் கட்டடம் என இரண்டு விடுதிக் கட்டடங்களை மொத்தம் ரூ.5,90,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா)

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கட்டடப் பணிகளுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு-02-பழங்குடியினர் நலன் - 796 - பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநில செலவினங்கள் - JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் - 16 பெரும் பணிகள்.

(த.தொ.கு.4225 02 796 JA 1602)"

5. மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஒப்பளிப்பு கோரும் கருத்துருவினை தாட்கோவால் தயாரிக்கப்பட்ட விரிவான மதிப்பீட்டறிக்கைகளுடன் இணைத்து அனுப்புமாறும், இத்திட்டத்தை அரசு விதிமுறைகளைப் பின்பற்றி உரிய காலத்தில் செய்து முடிக்குமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.50525/ஆதி(ம)பந/2017, நாள் 14.10.2017-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

**பெறுநர்:**
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை - 600 005.
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை - 600 018.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை -6/18/35.
மாநில முதன்மைக் கணக்காயர் (கணக்கு மற்றும் பணவரவு),
361, அண்ணாசாலை, சென்னை - 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 600 008.
மாவட்ட ஆட்சியர், திருச்சி.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருச்சி.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி.

**நகல்:**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ பமே1) துறை, சென்னை - 600 009.
உதிரி / இருப்புக்கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

23.10.17